**தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டு இறுதி திகதியில் திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 3,000,000 ஆன காணி, கூட்டுத்தொகை ரூபா 7,728,000 ஆன இரு கட்டிடங்கள் மற்றும் ரூபா 720,000 ஆன 12 வாகனங்கள் நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் கணக்கிடப்படல் வேண்டும். |
| **(ஆ)** | மீளாய்வாண்டினுள் ரூபா 3,380,950 செலவு செய்து 09 சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட மூலதன சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிலையான சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்சேர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.6.2 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் கட்டுநிதி கணக்கு (ஏசீஏ-03) பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி திகதியில் மீதியொன்று காணப்படாத போதிலும் திறைச்சேரி கணினி அச்சு பிரதி குறிப்பு (எஸ்ஏ-70) பிரகாரம் ரூபா 21,496,362 ஆன மீதியொன்று காணப்பட்டது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் சனவரி முதல் வாரத்தினுள் மாற்றப்பட்ட கட்டுநிதி மீதியாகும். | சரியாக கணக்கிடப்படுதல் வேண்டும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை மாவட்ட அலுவலகம் மற்றும் மாத்தளை மத்திய தாவர நாற்று மேடை தாவரவியல் பதிவேடும், மாத்தளை மாவட்ட அலுவலக விளைச்சல் பதிவேடும் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு வருகின்றது. | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | | |
| **பாராளுமன்ற சட்டம்**<br>1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | 289,964,900 | அமைச்சரினால் கட்டளை தயாரிக்கப்பட்ட பின்னர் விவசாய பயிர்கள் பயிர் செய்யப்படும் மற்றும் தாயரிக்கும் | திணைக்களத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் செயற்படுத்துவதற்கு முன்னர் வரிசை அமைச்சிற்கு சமர்ப்பித்து அமைச்சின் | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தரப்பினருக்கு மானியம் மற்றும் நிதி ரீதியிலான வேறு வழங்கள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சரினால் கட்டளை தயாரிக்கப்படாது மீளாய்வாண்டினுள் ஏற்றுமதி மேம்பாடு வழங்கல்கள் பயனாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டிணைவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2028 வரை கூட்டிணைவுத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | கூட்டிணைவுத் திட்டம் உரிய காலத்தினுள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டில் நாற்று வகைகள் 12 மேம்படுத்துவதற்கு ரூபா 400,000,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 387,697,746 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்குரியதாக ஆண்டினுள் 12 நாற்று வகைகளுக்குரிய பயிர்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதில் கண்டி மாவட்டத்தினுள் 622,226 பயிர்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் | பின்னூட்டல் நடவடிக்கைகள் தாமதமாகி மேற்கொள்ளப்படலான து குறைத்துக் கொள்வதற்காக மேற்பார்வை உத்தியோகத்தர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. | பகிர்ந்தளிக்கப்படுகின்ற பயிர்கள் ஊடாக உயர்பட்ச உற்பத்தியினை பெற்றுக் கொள்ளும் வரையில் பின்னூட்டல் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 03 செயற்திட்ட உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 10 விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 9,580 மிளகு பயிர்களில் 4,240 பயிர்கள் அழிந்து போயிருந்தது. அவ்வாறே நுவரெலியா மாவட்டத்தின் ரிகில்லகஸ்கட செயற்திட்ட உத்தியோகத்தர் பிரிவு தொடர்பாக மிளகு மற்றும் கோபி முறையே 2,890 மற்றும் 600 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் மிளகு மற்றும் கோபி பயிர்கள் முறையே 1,225 மற்றும் 598 அழிந்து போயிருந்தது. | | |
| **(ஆ)** | ஏற்றுமதி விவசாய திணைக்களம் ஆராய்ச்சிக்காக மீளாய்வாண்டில் ரூபா 10,000,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் 6,410,734 ஆன தொகை ஆண்டினுள் செலவு செய்திருந்தது. அதில் மாத்தளை ஆராய்ச்சி மத்திய நிலையத்திற்கு ரூபா 5,703,092 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 3,607,811 செலவு செய்யப்பட்டிருந்தது. மாத்தளை ஆராய்ச்சி நிலையத்தில் கருவா தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் சீனிக்கு பதிலாக கருவா பயன்படுத்தப்பட்டு பிஸ்கட் உற்பத்தி செய்ய கூடும் என முடிவு காணப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் உற்பத்தியாளர்கள் அறிவூட்டும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே ரூபா 730,000 செலவு செய்து மிளகு தொடர்பான 04 ஆராய்ச்சிகள் செயற்படுத்தப்பட்டு காய்ந்த கருப்பு மிளகிற்கு பைபரின் பிரித்தெடுப்பதற்கான முறைமை அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கையில் பயிர்செய்யும் மிளகு பிரதேசங்களின் பிரகாரம் அதன் தரம் வேறுபடும் விதம் பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் பொதுமக்களுக்கும் மிளகு உற்பத்தியாளர்களுக்கும் தெரிவிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீனி அற்ற கருவா பிஸ்கட் உற்பத்தி தொடர்பாக விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஊடாக உற்பத்திாளர்களுக்கு அறிவூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கருவா அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி பெற்றுக் கொள்வதற்கும் பிஸ்கட் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு இந்த தொழிநுட்பத்தினை அறமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மிளகு தொடர்பாக எதிர்காலத்தில் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இந்த ஆராய்ச்சி பெறுபேற்றை பய்னடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய உற்பத்தி தொடர்பில் சிறிய பரிமாணத்தில் உற்பத்தி மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் காணப்படுகின்றதுடன் எதிர்காலத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஆராய்ச்சி விளைவுகள் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யப்படுதல் மற்றும் பிரயோக உற்பத்தி முறைமை ஊடாக செயற்படுத்தல் வேண்டும். |

## 3.3 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல்முன்னேற்றங்களைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை ஆராய்ச்சி நிறுவனத்தில் நாற்று மேடைகளில் பொலித்தீன் வீடொன்று நிர்மாணிப்பதற்கு 2021 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 420,031 செலவு செய்யப்பட்டு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் குறித்த நிர்மாணிப்பு மேற்கொள்ளப்படாது பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் இரண்டாம் காலாண்டிற்கு முன்னர் இந்த நிர்மாணிப்பு மேற்கொண்டு நிறைவு செய்வதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | உரிய காலத்தினுள் தொடர்புடைய செயற்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் திணைக்களம் பயன்படுத்தும் 387 ஹேக்கரிலான 31 காணித் துண்டுகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணி உரித்திகை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 4,850,000 ஆன 05 வாகனங்கள் 2-4 ஆண்டுகளாக விளைவற்றதாக மற்றும் குறை பயன்பாட்டுடன் பிரதான அலுலகத்தில் மற்றும் மாத்தளை மாவட்ட அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வாகனங்கள் கைதவிர்ப்பு செய்யும் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வாகனங்கள் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை காலப்பகுதிக்குரியதாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் ஊடாக நேரடியே செயற்படுத்தப்படுகின்ற 12 நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யக்கூடிய உயர்ந்தபட்ச திறன் 3,005,000 பயிர்களாவதுடன் உற்பத்தி இலக்கு 2,104,508 ஆக காணப்பட்ட போதிலும் பயிர் உற்பத்தி 1,829,144 ஆக காணப்பட்டது. அக் காலத்தினுள் | குறித்த காலத்தினுள் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்னுரிமை பெற்றுக் கொடுப்பதுடன் பயிர்கள் உற்பத்தியும் உயர்பட்சமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | நாற்று மேடைகள் உயர்பட்ச திறனில் செய்றபடுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றுப்படுத்தப்பட்ட பயர்கள் 1,560,005 ஆக காணப்பட்டதுடன் வெளியிடப்பட்ட பயிர்களின் எண்ணிக்கை 1,514,813 ஆகும். திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற குண்டசாலை மற்றும் நில்லம்ப நாற்று மேடைகளின் உயர்ந்தப்பட்ச ஏற்றுமதி பயிர் உற்பத்தி திறன் ஆண்டுதோறும் 250,000 பயிர்களாக காணப்பட்ட போதிலும் ஆண்டிற்கான உற்பத்தி பயிர்கள் 65,026 ஆக அதாவது 26 சதவீதம் ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் பயிர் இலக்கிற்கு இணையாக களத்திற்கு பயிர் வழங்கலானது 44 சதவீதமாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே 10 அரச நாற்று மேடைகளின் உய்பட்ச திறனிற்கு இணையாக பயிர் உற்பத்தி 61 சதவீதமாக காணப்பட்டது. | | |
| (ஈ) | முல்ஹால்கெலே மத்திய நாற்று மேடையில் 4.2 ஹேக்கர் காணி எந்தவொரு பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாது குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | 06 ஹேக்கர் 40 பர்சஸ் அளவிலான நாற்று மேடையில் 05 ஹேக்கர் செங்குத்தான சரிவுகளுடன் அமைந்துள்ளமையினால் நில முகாமைத்துவத்தின் போது நிலபரப்பு தடையாகக் காணப்படுகின்றது. | சொத்துக்கள் பயனுள்ள முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.5 நிதி சர்ச்சை தன்மையிலன கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முல்ஹால்கெலே மத்திய நாற்று மேடையில் ரூபா 470,745 ஆன மூலபொருட்களின் குறைப்பாடு காணப்பட்ட போதிலும் அது தொடர்பில் பொறுப்பு கூறவேண்டிய தரப்பினர்கள் இனங்காணப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிதி பிரமாணம் 104 (4) பரிசோதிக்கப்பட்டு வருகின்றது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளய்வாண்டின் இறுதி திகதிக்கு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 903,544 ஆன 17 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு புத்தகத்திலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு அல்லது பொறுப்பு கூறப்பட வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதி பிரமாணம் பிரகாரம் குறித்த பரிசோதனைகள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமாக 98 வாகனங்கள் காணப்படுகையில் 2022 மே மாதம் தொடக்கம் ஒரு ஆண்டு காலம் மாதமொன்றிற்கு 3,000 கிலோமீட்டர் ஓடப்படும் அடிப்படையில் மாதாந்தம் 178,000 வாடகைக்கு வாகனமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டினுள் 36,000 கிலோமீட்டர் ஓடப்பட வேண்டிய போதிலும் அக் காலத்தினுள் 18,020 கிலோமீட்டர் பயணித்தில் 17,980 கிலோ மீட்டர்கள் குறை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 1,066,813 ஆன கிரயம் விளைவற்றதாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நிலை காரணத்தினால் உத்தியோகப்பூர்வ பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, அரச கொள்கை அடிப்படையில் அரச செலவீனத்தினை மட்டுப்படுத்தப்படல், காரணத்தினால் வெளிகள கடமைகளில் ஈடுபடல் குறைந்தமை, **QR** அலகின் கீழ் எரிபொருள் பெற்றுக் கொள்ளப்படல், **ZOOM** தொழிநுட்பத்தின் ஊடாக கூட்டங்கள் நடத்தப்படல் போன்ற காரணங்களினால் வாகனங்களின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டது. | தேவை கருத்திற் கொள்ளப்பட்டு வாகனங்கள் வாடகை அடைப்படையில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் அரசாங்கத்திற்கு குறைந்த கிரயம் ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கில் ஓய்வுப் பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து 3 உம் 5 உம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டு கூட்டுத்தொகை ரூபா 95,462 ஆன | பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஓய்வூதிய பிரிவிற்கு இந்த | முற்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீதியொன்று மற்றும் கடமையை விட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து 04 தொடக்கம் 20 ஆண்டுகள் காலமாக நிலவி வருகின்ற ரூபா 464,145 ஆன கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் தகவல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கடமையை விட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | திணைக்களம் வாகனங்களுக்கு தேவையான டயர்களை உரிய வண்ணம் இனங்காணப்படாது கடந்த ஆண்டின் திசெம்பர் மாதம் கூட்டுத்தொகை ரூபா 2,416,265 ஆன 50 டயர்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் அதில் 1,812,231 ஆன 35 டயர்கள் களஞ்சியத்தில் எஞ்சி காணப்பட்டது. | 2022 ஆண்டின் வாகனங்கள் உரிய வண்ணம் ஓடப்படாமையினால் அவ் ஆண்டு டயர்கள் வழங்கப்படாமை, 2023 ஆம் ஆண்டிற்காக இருப்பு மீதி பேணிச் செல்லும் நோக்கில் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டது. | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் 02 நாற்று மேடைகளின் மூலப்பொருட் தேவைகள் குறிப்பாக இனங்காணப்படாது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,294,000 ஆன பெறுமதியுடைய நடுத்தர பானைகள் 102 க்யூப்கள் மீளாய்வாண்டினுள் பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது. | இருப்பு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டினுள் விளைவற்று காணப்பட்ட போதிலும் அடுத்த ஆண்டில் பயிர்கள் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வருடாந்த தேவைப்பாடு இனங்கண்டு கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாரான பதவியணியினை இணக்கும் போது 166 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 24 பதவிகள் மேலதிகமாக காணப்பட்டது. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிக பதவிகள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டத்தில் 24 வெற்றிடங்கள் இலங்கை விஞ்ஞான சேவைக்குரிய பதவிகளாவதுடன் அது திணைக்கள நடவடிக்கைகள் தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தது. | மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் 04 வர் இணக்கப்பட்டதுடன் 2023 யூலை 29 ஆந் திகதி பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்டுள்ள பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் எஞ்சிய வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்குள்ளது. | தேவை கருத்தி கொள்ளப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |
| (ii) | மாவட்ட / விடயத்துடனான செயற்திட்ட உத்தியோகத்தர்கள் பதவியில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் பதவியில் 58 வெற்றிடங்கள் காணப்பட்டமை வெளிகள நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்வதில் பாதகமாக தாக்கமளித்திருந்தது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவை கருத்திற் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |